1991 செப்டம்பர் 20 (பேரவைத் தலைவர்)

வடிக்கைகளை எடுப்பதற்கு இந்த ஒரு சங்கம் என்று இல்லாமல் எல்லா சங்கங்களிலும் இன்றைக்கு இந்தச் செயலாளர்கள் பழைய தலைவர்களைப் போல இருந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மீதும் ஏதாவது உரிய நடவடிக்கைகள் எடுத்தால்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகள் வராமல் தடுக்க முடியும். அதற்கு அரசு தக்க முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தைச் சொன்ன பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதற்கு முழு ஆதரவு அளித்த பிறகு இந்தச் செயலாளர்கள் பலயிடங்களில் இப்படிப்பட்ட நிலைகளில் இருப்பதை நான் நன்கு அறிவேன். 20 வருடங்கள், 25 வருடங்கள் என்று ஒரே சங்கத்திலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு தக்க நடவடிக்கைகளை அதற்கான ஒரு மசோதாவைக்கொண்டு வந்து நிறைவேற்றி எடுப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

II. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக தலைவர் ஆகிய நான் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் செயல்முறை பற்றிய ஆய்வு குறித்த குழுவின் 8-வது அறிக்கை. 1971—72 முதல் 1975—76 ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1986—87) அளித்த நாற்பத்தி இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை மீதான குழுவின் ஒன்பதாவது அறிக்கை.

மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் செயல்முறைகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு (1985—86) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள மேல் நடவடிக்கை பற்றிய அறிக்கை மீதான பத்தாவது அறிக்கை ஆகியவற்றை இப் பேரவைக்கு அளிக்கின்றேன்.